DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT/SPECIAL COURT UNDER E.C ACT CASES, THANJAVUR

S.C.No. -202/2025

Prosecution PW -1

| | | |
|---|---|---|
| Name | Thiru.Thamilarasan | Occupation |
| Husband/Father Name | | Village |
| Taluk | | Age |
| Date | 11.02.2026 | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

Accused A1 to A5 present.

<u>முதல் விசாரணை</u>

நான் அதிராம்பட்டில் குடியிருந்து சுகன் சீவன் மருத்துவமனையில் அவசர சிகிச்சை பிரிவில் emergency care technician ஆக பணிபுரிந்து வருகிறேன். சாட்சி மங்கையர்கரசி நான் திருமணம் செய்துகொள்ள இருக்கும் பெண். 1 முதல் 5 எதிரிகளில் 1வது எதிரி பாபுவை மட்டும் தெரியும். 16.08.2024ம் தேதி மங்கையர்கரசிக்கு உடல் நிலை சரியில்லை என்று மீனாட்சி மருத்துவமனையிலிருந்து எனக்கு போன் செய்தார். நான் மாலை 8.00 மணிக்கு மருத்துவமனைக்கு சென்று மங்கையர்கரசியை பார்த்து மங்கையர்கரசியின் தயாருக்கு தகவல் சொல்லி மங்கையர்கரசியை வீட்டிற்கு அழைத்துச் செல்வதாக கூறினேன். திருவையாறு செல்வதற்காக பள்ளியக்கரகாரம் பைபாஸ் ரோடு வழியாக அழைச்செல்லும் போது, ஆலக்குடி பாலத்தில் மங்கையர்கரசி வாந்தி எடுத்ததால் இருசக்கர வாகனத்தை நிறுத்தி, பாலத்தில் கொஞ்ச நேரம் உட்கார வைத்திருந்தேன். அப்பொழுது அடையாளம் தெரியாத 2 நபர்கள் வந்து எங்களிடம் நகை, பணம் இருக்கா என்று விசாரித்தார்கள். எங்களிடம் இல்லை என்று சொன்னேன். அதன்பிறகு அந்த இருவர் போன் செய்தார்கள் அதன் பிறது 2 பேர் வந்தார்கள். அந்த 4 பேரும் என்னிடம் நகை, பணம் உள்ளதா என்று கேட்டார்கள் இல்லை என்று சொன்னதும் Oppo A 53 மொபைல் போனை பிடிங்கி கொண்டு சென்றுவிட்டார்கள். அந்த 4 பேர் நீதிமன்றத்திலுள்ள 5 எதிரிகளில் இல்லை. அந்த 4 பேர் பணம் கேட்டதும் மங்கையர்கரசி அவருடைய சகோதரியிடம் செல்போனில் தொடர்பு கொண்டு என்னுடைய செல்போன் Gpay க்கு ரூ.3000/- அனுப்பினார். இந்த

ரூ3000/-ஐ ன் Gpay ல் இருந்து அங்கே வந்த ஒரு நபர் அவருடைய செல்போனுக்கு Gpay மூலம் மிரட்டி மாற்றிக்கொண்டார். பின்னர் என்னுடைய மொபைல் போனை எடுத்துக்கொண்டு சென்றுவிட்டார்கள். நானும் மங்கையர்கரசியும் வேறுவேறு சாதியாக இருந்து காதலித்துக்கொண்டிருந்ததால் எங்கள் வீட்டிற்க தெரிய வேண்டாம் என்று போலிசில் புகார் கொடுக்காமல் இருந்தோம். பின்னர் 2 நாள் கழித்து கள்ளபெரம்பூர் போலிசார் எனக்கு போன் செய்து அழைத்தார்கள். அதன்பிறகு நான் கள்ளபெரம்பூர் காவல் நிலையம் நான் சென்றேன். அவர்கள் என்ன நடந்தது என்று விசாரித்து என்னிடம் எழுத்து மூல புகார் வாங்கினார். காட்டப்படும் 18.08.2024ம் தேதியிட்ட புகார் நான் என் கைப்பட எழுதிக்கொடுத்தது தான். அந்த புகார் அதசாஆ.**1**. காட்டப்படும் செல்போன் என்னுடையது தான். அந்த செல்போன் சா.பொ.**1**. நான் கனாரா வங்கியில் சேமிப்பு கணக்கு வைத்துள்ளேன். என்னுடைய Gpay எண்.9840102746. நான் Gpay, Phonepay இரண்டையும் பயன்படுத்துகிறேன். சம்பவத்தன்று இரவு Gpay account மூலமோ அல்லது phonepay account மூலமோ password -ஐ என்னிடம் போடச்சொல்லி பணத்தை மாற்றிக் கொண்டார்கள். பணம் ரூ.3000/- ஐ எடுத்துக்கொண்டார்கள். போலிஸ்சார் என்னை விசாரித்தார்கள்.

<u>குறுக்கு விசாரணை எதிரிகள் தரப்பில்</u>

இல்லை.

நான் சொல்ல என் உத்தரவுபடி தட்டச்சிடப்பட்டு
என் முன்னிலையிலும், மேற்பார்வையிலும் சாட்சிக்குப் படித்து
காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று ஒப்புக்
கொள்ளப்பட்டது.

ஒம்/-...ஜி.சுந்தரராஜன்,
கூடுதல் மாவட்ட (ம) அமர்வு நீதிபதி,
இன்றியமையாப் பண்டங்கள் சட்ட சிறப்பு நீதிமன்றம்,
தஞ்சாவூர்